# இலங்கை இராணுவம்

# விலைமனுக்கோரல்

## விறகுகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல் - 2024

1. **2024.01.01 ஆந் திகதி முதல் 2024.12.31 ஆந் திகதி** வரையான காலப்பகுதிக்குள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 38 இராணுவ முகாம்களுக்கு தேவையான விறகுகளை வழங்குவதற்காக கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இலங்கை இராணுவ தலைமையகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| அனுராதபுரம் | பராக்கிரமபுர | இரத்மலானை | கேகாலை |
| திருக்கோணமலை | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | புத்தல |
| மாங்குளம் | எம்பிலிபிட்டிய | பூநகரின் | ஹம்பாந்தோட்டை |
| அம்பேபுஸ்ஸ | பலாலி | வவுனியா | கோம்பகஸ்ஹந்தி |
| தியத்தலாவ | யாலபலட்டுபான | கிரன்சி | மன்னார் |
| மிருசுவில் | ஒட்டுச்சுட்டான் | புனானி | இங்குராக்கொடை |
| அம்பாறை | புத்தளம் | வீரவில | துனுக்காய் |
| நாவுல | இரத்தினபுரி | கொக்எலிய | மாதுரு ஓயா |
| முல்லைத்தீவு | கதிர்காமம் | பருத்தித்துறை | |
| இய்யகச்சி | புதுகுடியிருப்பு | வாழைச்சேனை | |

2. மனு ஆவணங்களை வழங்குதல், மனுக்களை சமர்ப்பித்தல், மனு திறக்கும் திகதி மற்றும் நேரம் ஆகியவை பின்வருமாறு மற்றும் மனுக்கள் திறக்கப்படும் சந்தரப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.

| | | |
|---|---|---|
| மனு ஆவணங்களை வழங்குவதற்கான ஆரம்பம் | - | 2023.07.20 |
| மனு ஆவணங்களை வழங்குவதற்கான கடைசி திகதி மற்றும் நேரம் | - | 2023.08.28, பி.ப.3.00 வரை |
| மனு சமர்ப்பிப்பின் இறுதி திகதி மற்றும் நேரம் | - | 2023.08.29 பி.ப.10.00 |
| மனு திறக்கும் திகதி, நேரம் மற்றும் இடம் | - | 2023.08.29 பி.ப.10.00<br>இலங்கை இராணுவத் தலைமையகம்,<br>இராணுவத் தலைமையக வாகனத் தரிப்பிடம்,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர,<br>கொழும்பு. |

3. விலைமனு விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு முகாமிற்கும் வேறு வேறாக மீளளிக்கப்படாத **ரூ.2,500.00** பணத்தினை கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் பணிப்பாளர்-(நிதிக்கு) வைப்பிலிடல் வேண்டும். (காசோலை ஏற்றுக்கொள்ளப்படாது) வைப்பிலிடப்பட்ட பணத்திற்காக வழங்கப்பட்ட ரசீதின் பிரதியை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவ தலைமையக வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"விறகுகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல் - 2024"** எனக்குறிப்பிட்டு **தலைவர், இராணுவ கொள்முதல் குழு, உபகரணங்கள் பணிப்பாளர் நாயக கிளை, இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் நேரடியாக வருகைத்தந்து இடலாம்.

5. விண்ணப்பதாரர்கள் விலைமனுவுடன் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

அ. வியாபார பதிவுச் சான்றிதழ் (உறுதிபடுத்தப்பட்ட பிரதி)

ஆ. மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்பிலிடப்பட்ட இரசீதின் பிரதி

இ. கடந்த மூன்று ஆண்டுகளுக்கான வருமான வரி கணக்காய்வு அறிக்கைகள்

ஈ. விண்ணப்பதாரர் வைத்திருக்கும் வங்கி கணக்கு தொடர்பான வங்கி அறிக்கை.

உ. வழங்கப்பட்ட சேவையை நிரூபிக்க ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஊ. சொத்துக்கள் மற்றும் நிதிகளின் ஸ்தீரத்தன்மையை உறுதிப்படுத்த மாகாணத்தின் மாவட்ட செயலாளர் / பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட படிவங்களால் (பொது 170) ஒவ்வொரு முகாமுக்குமான **ரூ.200,000.00** க்கு குறையாத சொத்து சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த சான்றிதழ் விலைமனு ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதிக்கு முன் 30 நாட்களுக்குள் பெறப்பட்டதாக வேண்டும்.

6. விண்ணப்பதாரரினால் விலைமனு விண்ணப்பங்களை கோரும்போது, அந்த நபர்களின் விபரங்கள் விண்ணப்பிக்கும் இடங்களில் குறிப்பிடப்பட வேண்டும்.

7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு விலைமனுப்பத்திரத்தையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவருக்கு உரித்தானது

8. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கை இராணுவத் தலைமையகத்தின் வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும், மேலும் தொடர்புடைய மனு ஆவணங்களை கீழே உள்ள பந்தி 09 இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் **2023.07.20** முதல் **2023.08.28** வரை **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** வரை (வார நாட்களில் இலவசமாக) பரிசோதிக்கலாம்.

9. மேலே குறிப்பிட்டுள்ள முகவரி ஆவது

| | | |
|---|---|---|
| கவனத்திற்கு | : | பணிப்பாளர், வழங்கல் மற்றும் போக்குவரத்து |
| முகவரி | : | இலங்கை இராணுவத் தளபதி,<br>இலங்கை இராணுவத் தலைமையகம்,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர,<br>கொழும்பு. |
| தொலைபேசி | : | 011-2302568, 011-2302569 |
| மின்னஞ்சல் | : | **dtesandt@army.lk /dtesandt0@gmail.com** |

இராணுவத் தளபதி

**இலங்கை இராணுவ தலைமையகம்**

ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு